பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 01 2025 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசு தினத்தை ஒட்டி புதுதில்லி கடமைப் பாதையில் நடைபெறும் அணிவகுப்பை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு பார்வையிட உள்ளார்.

2. ஈர நிலங்களின் பட்டியலில் இந்தூர் மற்றும் உதய்பூர் நகரங்கள் இணைந்துள்ளதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

3. வேங்கைவயல் குடிநீர்த் தொட்டியில் அசுத்தம் கலந்த வழக்கு விசாரணையை சி.பி.ஐ.-யிடம் ஒப்படைக்குமாறு மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

4. மகா கும்பமேளாவை ஒட்டி பிரயாக்ராஜில் கண்கவர் டிரோன் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

5. பிரான்சில் நடைபெற்ற சர்வதேச தடகள போட்டியின் தடை தாண்டும் ஓட்டத்தில் இந்தியாவின் **Jothi Yarraji** தங்கப்பதக்கம் வென்றார்.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<>>>>

நாட்டின் 76வது குடியரசு தினம் நாடு முழுவதும் இன்று கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

புதுதில்லி கடமைப்பாதையில் நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார்.

இந்தோனேஷிய அதிபர் திரு. பிரபாவோ சுபியாந்தோ இந்த ஆண்டு குடியரசு தின விழா சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

தேசிய நிகழ்வுகளில் மக்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் விதமாக, குடியரசு தின அணிவகுப்பை சிறப்பு அழைப்பாளர்களாக பார்வையிட பஞ்சாயத்து அமைப்புகளின் தலைவர்கள், கைவினைக் கலைஞர்கள், விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டப் பயனாளிகள் உள்ளிட்ட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை ஊக்கமளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குடியரசு தினத்தையொட்டி குடியரசுத்தலைவர் ஆற்றிய உரையை தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், இந்த உரையில் குடியரசுத்தலைவர் பல்வேறு அம்சங்களை சுட்டிக்காட்டி இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக நமது அரசியல் சாசனத்தின் சிறப்புகளையும், நாட்டின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து பாடுபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருப்பதும் வரவேற்கத்தக்கது என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஈர நிலங்களின் பட்டியலில் இந்தூர் மற்றும் உதய்பூர் நகரங்கள் இணைந்துள்ளதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவை சுட்டிக்காட்டியுள்ள பிரதமர், இந்த அங்கீகாரம் நீடித்த வளர்ச்சிக்கான அரசின் உறுதிப்பாட்டை பிரதிபலிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இயற்கைக்கும், நகர்ப்புற வளர்ச்சிக்கும் இடையே இணக்கத்தை ஏற்படுத்தவும் இது உதவும் என அவர் கூறியுள்ளார்.

நாடு முழுவதும் பசுமையான, தூய்மையான, சுற்றுச்சூழலுக்கு உகந்த நகரங்களை உருவாக்குவதற்கு இந்த அங்கீகாரம் ஊக்கமளிக்கும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் குடிநீர்த் தொட்டியில் அசுத்தம் கலந்த வழக்கு விசாரணையை சி.பி.ஐ.-யிடம் ஒப்படைக்குமாறு மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர்களைக் குற்றவாளிகளாக்கும் தமிழக காவல்துறையின் செயல் கொடூரமானது என்று குற்றம் சாட்டியுள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக விசாரணை என்ற பெயரில் ஏமாற்று வேலை நடந்து வந்ததாகவும் தற்போது இந்த விவகாரத்தில் திமுக அரசின் கபட நாடகம் அம்பலமாகி இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

திமுக அரசின் விசாரணையில் பட்டியலின மக்களுக்கு நீதி கிடைக்காது என்பதால் இந்த வழக்கை சி.பி.ஐ.-யிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் திரு. எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

சுய உதவிக் குழுக்களில் இடம்பெறும் பெண்களின் எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகளில் வெகுவாக அதிகரித்துள்ளது என்று மத்திய ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் திரு. சந்திரசேகர் பெம்மசானி கூறியுள்ளார்.

குடியரசு தினத்தையொட்டி புதுதில்லியில் நேற்று நடைபெற்ற 'வலிமையான சமுதாயம், வலிமையான லட்சாதிபதி சகோதரி' எனும் தலைப்பிலான நிகழ்ச்சியில் பேசிய அவர், சுய உதவிக் குழுக்களில் 10 கோடிக்கும் அதிகமான பெண்கள் உறுப்பினராக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுக்களின் மூலம் பயனடைந்து லட்சாதிபதி சகோதரிகளாக உருவெடுத்துள்ள அவர்கள், நாட்டின் பொருளாதாரத்திற்கு வலிமை சேர்ப்பவர்களாக உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிராமப்புற பொருளாதாரம்தான் நாட்டின் வலிமையாக திகழ்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

பெண்கள் வருவாய் ஈட்டுவதன் மூலம் கிராமங்களில் ஏற்படும் முன்னேற்றம் ஒட்டுமொத்த நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பதாகவும் திரு. சந்திரசேகர் பெம்மசானி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதோடு நாடுகளுக்கு இடையேயான போரை முடிவுக்குக் கொண்டுவர உடனடி கவனம் செலுத்துவது அவசியம் என உலக பொருளாதார மன்றத்தின் தலைவர் திரு. **Borge Brende** தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்று வந்த உலக பொருளாதார மன்றத்தின் வருடாந்திர கூட்டத்தில் நிறைவுரையாற்றிய அவர், உலகம் முழுவதும் அரசியல், புவி அரசியல் மற்றும் நுண்ணிய பொருளாதார நடவடிக்கைகள் கேள்விக்குறியாகி இருப்பதாக கூறினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய ஐ.எம்.எஃப். நிர்வாக இயக்குநர் கிறிஸ்டாலினா ஜார்ஜிவா, புதிதாக உருவாகி உள்ள புவி அரசியல் சூழல் உலக நாடுகளின் வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகளை மாற்றியமைக்கும் என்று தெரிவித்தார்.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவின் முக்கிய அம்சமாக மௌனி அமாவாசை தினமான இம்மாதம் 29ஆம் தேதி திரிவேணி சங்கமத்தில் புனித நீராட வரும் பக்தர்கள் தடையின்றி எளிதில் வந்து செல்வதை உறுதி செய்ய உத்தரப்பிரதேச சாலைப் போக்குவரத்து நிறுவனம் விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது.

மாநிலத்தின் முக்கிய நகரங்களில் இருந்து பிரயாக்ராஜுக்கு கூடுதலாக சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுவதுடன் ரயில் மற்றும் விமான நிலையத்தில் இருந்து திரிவேணி சங்கமத்திற்கு கூடுதல் பேருந்துகளை இய்ககவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பிரயாக்ராஜில் நடைபெற்ற கண்கவர் ட்ரோன் கலைநிகழ்ச்சிகள் இரவிலும் விண்ணை ஒளிமயமாக்கியது.

இந்த காட்சிகளை லட்சக்கணக்கானோர் கண்டுகளித்தனர்.

<<<<>>>>

இந்திய இணையதள விளையாட்டு உருவாக்குவோர் சங்கம், வேவ்ஸ் ஓ.டி.டி. தளத்தில் இணைந்திருப்பது விளையாட்டு தொழிலின் எதிர்காலத்தை வடிவமைக்க உதவும் என தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

உலக ஒளி-ஒலி பொழுதுபோக்கு மாநாடான வேவ்ஸ்-க்கான சவால் அமர்வில் இத்றகான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**Road to Game Jam** என்ற பெயரிலான இந்த முன்னோடி நிகழ்ச்சி வேவ்ஸ் தளத்தில் இடம்பெறும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இது இந்தியாவின் விளையாட்டு நிகழ்ச்சிகள் உருவாக்குவோருக்கு அதிகாரம் அளிப்பதாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அமெரிக்காவின் 17 தன்னாட்சி கண்காணிப்பு அமைப்புகளை அந்நாட்டு அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் கலைத்துள்ளார்.

நாட்டின் புதிய அதிபராக அவர் பொறுப்பேற்றதில் இருந்து பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் அரசின் பல்வேறு முகமைகளில் செயல்பட்டு வந்த கண்காணிப்பு அமைப்புகளை கலைத்து அவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த அமைப்புகளில் தமது ஆதரவாளர்களை நியமிக்கவும் அவர் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால் அதிபர் திரு. ட்ரம்பின் இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது என விமர்சனங்கள் எழுந்துள்ளது.

அந்நாட்டின் சட்டவிதிகளின்படி இதுபற்றி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் 30 நாட்களுக்கு முன்பாக தெரிவிக்க வேண்டிய நிலையில் தமது நடவடிக்கை உடனடியாக அமலுக்கு வருவதாக அதிபர் கூறியிருப்பது சரியல்ல என்றும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

<<<<>>>>

எல்லைதாண்டி மீன்பிடித்ததாக கூறி ராமேஸ்வரம் மீனவர்கள் 33 பேர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது இவர்கள் கைது செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மீனவர்களின் 3 படகுகளும் இலங்கைப் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

**Nantes** உலக தடகள போட்டியின் தடை தாண்டும் ஓட்டத்தில் இந்தியாவின் **Jothi Yarraji** தங்கப்பதக்கம் வென்றார்.

பிரான்சில் நடைபெற்ற இப்போட்டியின் 60 மீட்டர் மகளிர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர் 8 புள்ளி பூஜ்ஜியம் நான்கு வினாடிகளில் கடந்து தேசிய சாதனையும் படைத்தார்

லக்ஸம்பர்கில் நடைபெற்ற தடகள போட்டியின் ஆடவர் தடைதாண்டும் ஓட்டத்தில் **Tejas Shirse** வெண்கலப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் 2 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 165 ரன் எடுத்தது.

166 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா, 19 புள்ளி 2 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை எட்டியது.

திலக் வர்மா அதிகபட்சமாக 72 ரன் எடுத்தார்.

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கோவா அணி 2-0 என்ற கோல் கணக்கில் சென்னை அணியை வென்றது.

**<<<<The End>>>>**